புதுச்சேரி அரசு
இந்து சமய அறநிலையத்துறை
நிர்வாக அதிகாரி (கோயில்கள்) அலுவலகம்
அருள்மிகு பத்ரகாளியம்மன் தேவஸ்தானம்
அம்பகரத்தூர்

எண்.:நி.அ.கோ/அபகாதே/அம்பகரத்தூர்/2025-26/156 தேதி: 24-10-2025

# கொட்டேசன் அறிவிப்பு

அம்பகரத்தூர் அருள்மிகு பத்ரகாளியம்மன் தேவஸ்தானத்தின் சார்பாக ஸ்ரீவரதராஜபெருமாள் ஆலய கும்பாபிஷேக விழாவிற்காக யாகசாலை, கொட்டகை, வேதிகை, குண்டம் மற்றும் இதர தொடர்புடைய பணிகள் செய்து கொடுக்க மூடி முத்திரையிடப்பட்ட விலைப்பட்டியல் (கொட்டேசன்) அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

கொட்டேசன் சமர்ப்பிக்க கடைசி
நாள் மற்றும் நேரம் : 03.11.2025 மாலை 3.30 மணி
கொட்டேஷன் பிரிக்கப்படும் தேதி மற்றும் நேரம் : 03.11.2025 மாலை 4.00 மணி
டேவணித்தொகை : ரூ. 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

## வேலையின் விவரம்:

அம்பகரத்தூர் அருள்மிகு பத்ரகாளியம்மன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீவரதராஜபெருமாள் ஆலய கும்பாபிஷேக விழாவிற்காக (01.12.2025) யாகசாலை (ஹோமகுண்டம், வேதிகை, பேப்பர் வேலைகள், அலங்கார வேலைகள், சுற்றுச்சுவர், தரை வேலைகள், வர்ணவேலைகள் மற்றும் இதர தொடர்புடைய வேலைகள் தேவஸ்தானத்தில் வழங்கப்படும் அளவுகள் மற்றும் விவரப்படி செய்தல்.

## ஸ்ரீவரதராஜபெருமாள், ஸ்ரீதாயார், ஸ்ரீஆண்டாள், ஸ்ரீசக்கரத்தாழ்வார், ஸ்ரீஆஞ்சநேயர், ஸ்ரீகருடாழ்வார், ஸ்ரீதன்வந்தரி மற்றும் ஸ்ரீராஜகோபுரம்:

| | |
|---|---|
| யாகசாலை அளவு (மேற்கூறை தகர ஷீட் இல்லாமல் சீலிங் அலங்காரம் செய்து பந்தல் அமைத்தல்) | தேவஸ்தான திருமண மண்டபத்தின் வடக்குபுறம் உள்ள தகர ஷெட்டில் 25 அடி அகலம் மற்றும் 56 அடி நீளம் யாகசாலை அமைத்தல் |
| **ஹோமகுண்டம் மற்றும் வேதிகை:** | |
| ஸ்ரீவரதராஜபெருமாள் | பஞ்சாக்னி மற்றும் கமல வேதிகை (கூர்மம், ஆதிஷேசன் உட்பட) |
| ஸ்ரீதாயார் மற்றும் ஸ்ரீஆண்டாள் | இரண்டு ஏகாக்னி மற்றும் கமல வேதிகை |
| பரிவாரங்கள் | பத்து ஏகாக்னி மற்றும் சதாரண வேதிகை |

யாகசாலையின் உயரம் தரை மட்டத்திலிருந்து ஒரு அடி இருத்தல் வேண்டும்.

யாகசாலை வேலைகள் அனைத்தும் செங்கற்கள், பச்சை செங்கற்கள் மற்றும் களிமண் சேற்றைக்கொண்டு செய்ய வேண்டும். அனைத்து பொருட்களான செங்கற்கள், பச்சை கல், சேற்று மண், கலவை மண், சிமெண்ட், பேப்பர், பெயிண்ட் மற்றும் இதர அனைத்து பொருட்களை

ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். யாகசாலையின் நான்குபுறமும் பேப்பர் மற்றும் அலங்கார வேலைகள் (ஒற்றை பக்கம்), பெயர்கள் எழுதுதல், மூங்கில் கம்பால் ஆன நிலைகால் செட், துவார பாலகர் நான்குபுறமும் அமைத்தல், சுற்றுச்சுவர் 2 அடி உயரம் அமைத்தல், பாலிகை தெளித்தல், யாகசாலை உட்புறம் துணி கட்டுதல், மீதம் உள்ள ஷெட் முழவதும் துணி கட்டுதல், ஷெட்டின் வடக்கு பக்கம் கழிவறையை மறைத்து பத்து அடி உயரத்திற்கு தகர ஷீட் கொண்டு அடைத்தல், யாகசாலை உட்புறம் தரை போடுதல் மற்றும் வர்ண வேலை உட்பட இதர யாகசாலை தொடர்புடைய அனைத்து வேலைகளும் செய்து கொடுத்தல்.

<u>நிபந்தனைகள்:</u>

1. கொட்டேசன் சமர்ப்பிக்கும்போது டேவணித்தொகையினை கட்டாயம் இணைக்கவேண்டும். டேவணித்தொகையினை வங்கி வரைவோலையாக **“நிர்வாக அதிகாரி, அருள்மிகு பத்ரகாளியம்மன் தேவஸ்தானம், அம்பகரத்தூர்”** என்ற முகவரிக்கு எடுக்கப்படவேண்டும். டேவணித்தொகை இணைக்காத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
2. ஒப்பந்ததாரர்கள் மேற்கண்ட யாகசாலை வேலைகளில் தங்கள் அனுபவம் தொடர்பான பணி ஆணை/முன் அனுபவ சான்றிதழ் போன்ற விவரங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மேற்படி தகவல்கள் இணைக்காத கொட்டேசன் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. மேற்கண்ட வேலைகளுக்கு தேவஸ்தானத்திலிருந்து எவ்வித பொருட்களும் வழங்கப்படமாட்டாது. ஆலயத்திற்கு மேற்கு பக்கம் உள்ள தேவஸ்தான இடத்தில் உள்ள தேவையான அளவு மண்ணை எடுத்து வந்து தங்கள் பொறுப்பில் ஆட்களை கொண்டு யாகசாலை உள்புறம் எடுத்த சென்று கொட்ட வேண்டும்
4. யாகசாலை வேலைகள் அனைத்தையும் பணி ஆணை வழங்கப்பட்ட தினத்திலிருந்து 20 நாட்களுக்குள் (25.11.2025-க்குள்) முடித்துக்கொடுக்க வேண்டும். சிவாச்சாரியார்கள் அவ்வப்போது சொல்லும் சிலவித மாறுதல்களையும் செய்துகொடுக்க வேண்டும்.
5. பணி தொடங்கிய பின்னர் பணி நடைபெற்றுள்ளதை கணக்கிட்டு அதற்கு தக்க முன்பணம் வழங்கப்படும்.
6. யாகசாலை வேலைகள் அனைத்தும் குறிப்பிட்ட நாட்களுக்குள் செய்து கொடுக்காத பட்சத்தில் டேவணித்தெகை மற்றும் பணிகள் செய்ததற்கான தொகையினையும் இழக்க நேரிடும்.
7. ஒப்பந்த தொகையிலிருந்து 2% சரக்கு மற்றும் சேவை வரி (TDS on GST), 1% (தனிநபர்) or 2% (நிறுவனம்) வருமான வரி போன்றவை பிடித்தம் செய்யப்படும்.
8. இதர நிபந்தனைகள், வரைபடங்கள் போன்ற விவரங்களை தேவஸ்தான அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.
9. மேற்கண்ட கொட்டேசன் ஏற்கவோ அல்லது எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்கவோ நிர்வாக அதிகாரி அவர்களுக்கு முழு உரிமையுண்டு.

நிர்வாக அதிகாரி (கோயில்கள்)

அலுவலக அறிவிப்பு பலகை:

1. மாவட்ட ஆட்சியர், காரைக்கால்
2. கண்காணிப்புபொறியாளர் Circle III, பொதுப்பணித்துறை, காரைக்கால்
3. நிர்வாக பொறியாளர் (கட்டிடம் மற்றும் சாலைகள்), பொதுப்பணித்துறை, காரைக்கால்
4. நிர்வாக பொறியாளர் (நீர்பாசனம் மற்றும் பொதுசுகாதாரம்), பொதுப்பணித்துறை, காரைக்கால்
5. உதவிப்பொறியாளர் (திட்டம்) - Circle III, பொதுப்பணித்துறை, காரைக்கால்
6. ஆணையர், காரைக்கால் நகராட்சி, காரைக்கால்
7. ஆணையர், கொம்யூன் பஞ்சாயத்து, திருநள்ளாறு, நெடுங்காடு, கோட்டுச்சேரி, நிரவி, திருமலைராயன்பட்டினம்.
8. ஸ்ரீதர்பாரண்யேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம், திருநள்ளாறு
9. தகவல் பலகை